# அறிவுறுத்தற் பத்திரம்

## பேராதனைப் பல்கலைக்கழகம் - தொடர் தொலைக் கல்வி நிலையம்
## கலைத்தேர்வுப் பரீட்சை - 2021 (வெளிவாரி – புதிய பாடத்திட்டம்) 300 வது தேர்ச்சி மட்டம்

**(அ) பரீட்சை விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள்**

I. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொடர் தொலைக்கல்வி நிலைய இணையத்தளத்தில் **30.02.2020** வரை காணப்படும் இப்பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கம் (download) செய்து அதனை பூர்த்திசெய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

**கடந்த வருடங்களில் விநியோகிக்கப்பட்ட அல்லது விண்ணப்பதாரியால் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

II. இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் **200 வது மட்ட பரீட்சைக்கு தோற்றியிருத்தல் வேண்டும் என்பது முக்கிய தகைமையாகும். இத்தகைமைகளை** கொண்டிராதவர்களது விண்ணப்பங்கள் மற்றும் உரிய மாதிரிப்படிவம் மூலம் விண்ணப்பிக்காதவர்கள் மற்றும் பூரணமற்ற அல்லது தாமதமாகி கிடைக்கப்பெறும் அனைத்து விண்ணப்பபடிவங்களும் நிராகரிக்கப்படும். மேலும், அத்தகைய விண்ணப்பதாரரின் <u>**பரீட்சைக் கட்டணங்கள் மீள்செலுத்தப்படமாட்டாது.**</u>

**(ஆ) பரீட்சை விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்**

- ***300 வது மட்டத்தில் பிரதான பாடங்களை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. (200 வது மட்டத்தில் தோற்றிய பிரதான பாடங்களுக்கே 300 வது மட்டத்திலும் தோற்றுதல் வேண்டும்.)***
- ***அவ்வாறே 300 வது மட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட 4 இணைப்பாடங்களும் பரீட்சைக்கு விண்ணப்பித்ததன் பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.***

*இவ்விண்ணப்பப்படிவத்தினை ஆங்கில ''கெபிடல்'' எழுத்துக்களில் மாத்திரம் நிரப்புதல் வேண்டும்.*
***(பரீட்சை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்க ஒழுங்கின்படி பின்வரும் மாதிரியில் இலக்கங்கள் இடப்பட்டுள்ளன)***

1. உங்களுக்குத் தரப்பட்டுள்ள வெளிவாரி மாணவர் பதிவேட்டில்/மாணவர் அறிமுக அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உமது பதிவு இலக்கத்தை உரிய குறியீட்டு எழுத்துடன் சரியாகக் குறிப்பிடவும். **(உதா: AE/BA/2015/……)/ (AE/BA/2016/……)**
2. உங்களது சரியான **தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைக்** குறிப்பிடவும்.
3. குறித்த கூண்டினுள் **"✓"** குறியீட்டினை இட்டு வண, திரு, திருமதி (Rev, Ms , Mr.) எனக் குறிப்பிடவும்.
4. முதலெழுத்துக்களுடன் கூடிய பெயரை இங்கு குறிப்பிடவும்.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | . | M | . | N | . | J | A | Y | A | S | U | N | D | A | R | A |

5. முதலெழுத்துக்களில் குறித்து நிற்கும் பெயர்கள் உட்பட உங்கள் முழுப்பெயரையும் முறைப்படி ஒழுங்காக சொற்களைப் பிரித்து கீழ் காட்டப்பட்டுள்ளவாறு எழுதவும்.

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | A | T | H | N | A | Y | A | K | A | | M | U | D | I | Y | A | N | S | E | L | A | G | E |
| N | I | M | A | L | | J | A | Y | A | S | U | N | D | A | R | A | | | | | | | |

6. a. குறித்த மொழி மூலம் தொடர்பான பாட வினாத்தாள்கள் தவிர பட்டப்படிப்பிற்குரிய பிரதான பாடங்களுக்கான அனைத்து வினாத்தாள்களும் அபேட்சகர் தம்மை பதிவு செய்த <u>மொழிமூலம்</u> வழங்கப்படும். நீர் பதிவாகியுள்ள மொழியினை தெளிவாக உரிய இடத்தில் குறிப்பிடவும். **(Sinhala: S, Tamil: T, English: E)**

b. துணைப் பாடங்கள் **நான்கு,** மற்றும் பிரதான பாடங்கள் **மூன்றுடன்** 301 மற்றும் 302 இலக்கமிடப்பட்ட பாடங்களில்

I. 300 வது மட்ட **பரீட்சைக்கு** மாணவர் தோற்ற விரும்பும் பாடங்களை **Ex** என குறிப்பிடப்பட்டுள்ள நிரலில் பாடத்திற்கு எதிரே **"✓"** குறியீட்டினை இடவும்.

***II.*** 300 வது மட்ட **கருத்தரங்குகளுக்கு** மாணவர் தோற்ற விரும்பும் பாடங்களுக்கு **Se** என குறிப்பிடப்பட்டுள்ள நிரலில் பாடத்திற்கு எதிரே **"✓"** குறியீட்டினை இடவும்.

III. 100 வது மட்டத்திற்கு இதுரையான அமர்வுகளின் எண்ணிக்கையும் வருடத்தையும், சுட்டிலக்கங்களையும் தெளிவாக குறிப்பிடவும்.

IV. 200 வது மட்டத்திற்கு இதுரையான அமர்வுகளின் எண்ணிக்கையும் வருடத்தையும், சுட்டிலக்கங்களையும் தெளிவாக குறிப்பிடவும்.

7. (a) உங்களது (வதிவிட, அலுவலக மற்றும் கையடக்க) தொலைபேசி இலக்கங்களை இங்கு குறிப்பிடவும்.

(b) உமது **Gmail** மின்னஞ்சல் முகவரியினை குறிப்பிடவும்.

***Gmail*** *மின்னஞ்சல் முகவரி தங்களிடம் இல்லை எனின் புதிய* ***Gmail*** *மின்னஞ்சல் முகவரி ஒன்றினை ஆரம்பித்து அதன் முகவரியினை குறித்த பெட்டியில் குறிப்பிடவும்.*

(c) உமது நிரந்தர வதிவிட முகவரியினை இங்கு குறிப்பிடவும்.

8. பரீட்சைகள் பின்வரும் நகரங்களை மையமாகக் கொண்டு நடைபெறும். பரீட்சை நிலையங்களில், நீர் விரும்பும், உமக்கு வசதியான நகரத்தை **இலக்கம் 1 இற்குள்ளும், இரண்டாம் விருப்பு நகரத்தை இலக்கம்-2 இற்குள்ளும், மூன்றாம் விருப்பு கரத்தை இலக்கம்-3 இற்குள்ளும்** குறித்த கூட்டில் இடவும். **பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்ததன் பின்னர் பரீட்சை நிலையத்தை மாற்றுவதற்கான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மற்றும் ஏனைய தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒருசில பரீட்சை நிலையங்கள் இரத்துச் செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. அத்தகைய தருணத்தில் உங்களது 2ம் அல்லது 3ம் தெரிவின் (2ம் அல்லது 3ம் விருப்பு நகரத்தின்) பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுதுவதற்கு நீங்கள் உட்படுத்தப்படுவீர்கள்.

**பரீட்சை நடைபெறும் நகரங்கள்:** மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம், மற்றும் பேராதனை

9. 300 வது மட்டத்திற்கான பதிவுக் கட்டணம், பரீட்சைக் கட்டணம், மற்றும் கருத்தரங்கு கட்டணம் ஆகிய கட்டணங்களைக் செலுத்தி கட்டண விபரங்களை குறிப்பிடவும்.

300 வது மட்டத்திற்கான உரிய கட்டணங்களை நாடெங்கினும் உள்ள ஏதாவதோர் மக்கள் வங்கிக் கிளையில் **"பேராதனைப் பல்கலைக்கழக தொடர் தொலைக்கல்வி நிலையத்தின்" 057-1-001-4-1338036** எனும் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யவும். கட்டண வைப்புப் பற்றுச் சீட்டில் (Cash Deposit Slip) விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினையும் பெயரையும் குறிப்பிடவும். கட்டணத்தை கணக்கில் வைப்புச் செய்ததன் பின்னர் உமக்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியினை (Original slip) விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள குறித்த இடத்தில் ஒட்டவும்.

கட்டணம் செலுத்தும் பற்றுச்சீட்டில்

I. பணம் வைப்புச் செய்த திகதியினை குறிப்பிடவும்
II. வைப்புச் செய்த மக்கள் வங்கிக் கிளையினைக் குறிப்பிடவும்
III. பற்றுச் சீட்டின் நகல் பிரதியொன்றினைக் கைவசம் வைத்துக்கொள்ளவும்

✸ காசுக்கட்டளை / தபால் கட்டளை / காசோலைகள் மூலமாக செலுத்தப்படும் கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| **300 வது மட்ட பரீட்சைக் கட்டண விபரங்கள்** | |
|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூபா. 5,000 /= |
| **செலுத்தப்பட வேண்டிய முழுப் பரீட்சைக்கான கட்டணம்**<br>பரீட்சை செயன்முறையாக்க கட்டணம் - 1000/= + ஒரு பாடத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் 1000/= **x** 10 பாடங்கள் **= 10 000/=** | ரூபா 11,000/= |
| கருத்தரங்கிற்கு ஒரு பாடத்திற்கு செலுத்தவேண்டிய கட்டணம் 1000/= ஆகும். (விண்ணப்பிக்கும் பாடங்களின் எண்ணிக்கை 10 எனின் செலுத்த வேண்டிய கட்டணம் 1000/= **x** 10 பாடங்கள்) | ரூபா 10,000/= |

**(ஆ) ஏனைய அறிவுறுத்தல்கள்**

- இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூர்த்திசெய்து ***9"x4"*** அளவிலான தபால் உறையொன்றினுள் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் தோற்றும் பரீட்சையின் பெயரையும், மாணவ பதிவு இலக்கத்தையும் குறிப்பிடவும். (பூர்த்திசெய்த விண்ணப்பத்தின் போட்டோ பிரதியொன்று தங்கள் வசம் வைத்திருக்கவும்.)
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை **பதிவு தபால் மூலம்** கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

***Assistant Registrar,***
***Centre for Distance & Continuing Education,***
***University of Peradeniya***
***P. O. Box 43, Old Galaha Road, , Peradeniya.***

**விசேட குறிப்பு -:**

- விண்ணப்பபடிவத்தினை எமக்கு சமர்ப்பிக்க முன்னர் உரிய இடத்தில் உங்கள் **<u>கையொப்பம்</u>** இடப்பட்டுள்ளதா என மீள் பரிசீலனை செய்யவும்.
- மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அல்லாத விண்ணப்பங்கள் பூரணமற்ற அல்லது தாமதமாகி கிடைக்கப்பெறும் அனைத்து விண்ணப்பபடிவங்களும் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பபடிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி – 30-03-2021**

கையொப்பம் :-

பிரதி பதிவாளர்
தொடர் தொலைக் கல்வி நிலையம்,
பதிவாளருக்குப் பதிலாக

அனைத்து விபரங்களையும் அறிந்துகொள்ள ***<u>www.pdn.ac.lk/cdce</u>*** எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும்.

- **மேற்குறித்த விதிமுறைகள் காலத்திற்கேற்ப மாற்றங்களுக்கு உட்படுத்தப்படலாம்.**